## உடனடியான மருத்துவ கவனிப்பிற்கு

**'000' (மூன்று பூஜ்யம்)-ஐ அழையுங்கள்** அல்லது உங்களுக்கு மிக அண்மையிலுள்ள அவசர சிகிச்சைப் பிரிவிற்குச் செல்லுங்கள்.

## மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு

தயவுசெய்து 131 450 எனும் இலக்கத்தினை அழைத்து 1800 360 000 எனும் இலக்கம் வேண்டுமெனக் கேளுங்கள். இது ஒரு இலவச சேவை.

## பேச்சுத் திறன் மற்றும் செவித்திறன் இழந்தோர்

'நேஷனல் ரிலே சர்வீஸ்' மூலமாக TTY அழைப்புகளை நாங்கள் ஏற்கிறோம் - உதவி மேசை: 1800 555 660

## உங்களுடைய பின்னூட்டல்களை எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்

உங்களுடைய பின்னூட்டல்கள் எமக்கு இன்றியமையாதவை
மின்னஞ்சல் - advice@pcas.org.au
தொலைபேசி - 1800 360 000

**www.pcas.org.au**

## 1800 360 000

காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை, வாரம் 7 நாட்கள்

விக்டோரிய அரசாங்கத்தின் உதவியுடன் 'ராயல் மெல்பர்ன் மருத்துவமனை'யினால் நடத்தப்படும் 'நோவு-தணிப்புப் பராமரிப்பு அறிவுரை சேவை' (Palliative Care Advice Service) எனும் திட்டத்திற்கு 'சுகாதாரத் திணைக்களம்' நிதியுதவியளிக்கிறது.

உங்களுக்குக் கிடைக்கக்கூடிய வடிவுருவில் இந்த வெளியீட்டினைப் பெற 1800 360 000 எனும் இலக்கத்தினை அழையுங்கள், தேவைப்படின் 'நேஷனல் ரிலே சர்வீஸ்'-ஐப் பாவித்து 13 36 77 எனும் இலக்கத்தினை அழையுங்கள், அல்லது <advice@pcas.org.au> எனும் விலாசத்திற்கு மின்னஞ்சல் செய்யுங்கள்

'விக்டோரிய அரசாங்கம்', 1 ட்ரெஷரி ப்ளேஸ், மெல்பர்ன் -இனால் அதிகாரம் அளிக்கப்பட்டு இது வெளியிடப்படுகிறது.
© பிரசுரிமை: விக்டோரிய மாநிலம், டிசம்பர் 2024 (2006731)



# விக்டோரிய மாநில நோவு-தணிப்புப் பராமரிப்பு

## அறிவுரை சேவை

(Victorian Palliative Care Advice Service)

## 1800 360 000

காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை, வாரம் 7 நாட்கள்

## விக்டோரிய மாநிலம் எங்கும் இருக்கும் ஒவ்வொருவருக்குமானது

VICTORIA State Government

வாழ்க்கையை மட்டுப்படுத்தும் நோய்களுடன் வாழ்ந்துவருபவர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே 'நோவு-தணிப்புப் பராமரிப்'(palliative care)பின் நோக்கம்.

**இந்த 'அறிவுரை சேவை'யானது விக்டோரிய மாநிலத்தில் வாழும் ஒவ்வொருவருக்குமானதாகும்.**

## வாழ்க்கையை மட்டுப்படுத்தும் நோயுடன் வாழ்ந்துவருகிறீர்களா?

## வாழ்க்கையை மட்டுப்படுத்தும் நோயுடன் வாழ்ந்துவரும் ஒருவருடைய பராமரிப்பாளரா, குடும்ப அங்கத்தவரா, நண்பரா அல்லது அயலவரா நீங்கள்?

பின்வருவன போன்ற கேள்விகளில் எம்மால் உங்களுக்கு உதவ இயலும்:

- நான் ஆதரவுதவியாக இருந்துவரும் நபருக்கு நோவு-தணிப்புப் பராமரிப்பினால் எவ்வாறு உதவ இயலும்?
- ஒரு பராமரிப்பாளராகப் பணியாற்றுவது குறித்த தகவல்களை நான் எங்கு காணலாம்?
- தகுந்த நோவு-தணிப்புப் பராமரிப்பு சேவை ஒன்றைக கண்டறிவது எப்படி?
- என்னுடைய வலி, குமட்டல் மற்றும் மூச்செடுக்க இயலாமையைத் தணிக்க நான் என்ன செய்யலாம்?
- நான் எதைப் பற்றியெல்லாம் யோசித்துத் திட்டமிட வேண்டும்?
- நோவு-தணிப்புப் பராமரிப்பைப் பற்றி என்னுடைய சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநருடன் நான் எவ்வாறு பேசுவது?

## வாழ்க்கையை மட்டுப்படுத்தும் நோயுடன் வாழ்ந்துவரும் ஒருவருடைய மருத்துவரா, செவிலியா அல்லது மற்ற சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநரா நீங்கள்?

எமது சிறப்புத்துவ நோவு-தணிப்பு செவிலி அல்லது மருத்துவரால் பின்வருவனவற்றைப் போன்ற விடயங்களில் உங்களுக்கு உதவ இயலும்:

- நோயறிகுறிகளைக் கட்டுப்படுத்துதல்
- மருந்து பரிந்துரைத்தல்
- வாய் வழியாய் உட்கொள்ளும் மருந்துகளை ஊசி மூலமாய் ஏற்றும் மருந்துகளாக மாற்றுதல்
- சருமத்திற்குக் கீழாகத் தொடர்ந்து உட்செலுத்தப்படும் திரவங்கள் ஊசி ஏற்றல்கள் (syringe drivers)
- முடிவுகள்-மேற்கொள்ளல் மற்றும் பராமரிப்பு குறித்த முன்கூட்டிய திட்டமிடல்.

பரிந்துரைகளை அளிக்கவோ, மருத்துவப் பதிவுகளைப் பார்க்கவோ, உள்ளூர்ப்பகுதி சுகாதார சேவை வழங்குநர்களல் அளிக்கப்படும் பராமரிப்பினை மாற்றவோ எம்மால் இயலாது.

**1800 360 000**

காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை, வாரம் ஏழு நாட்கள்

இலவசமானது மற்றும் அந்தரங்கமானது

**www.pcas.org.au**